**செய்தி வெளியீடு எண்: 063** **நாள்: 24.01.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.1.2018) தலைமைச் செயலகத்தில், தேசிய பெண் குழந்தை தினத்தை முன்னிட்டு, பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்கு சிறப்பாக பணியாற்றிய பெண் குழந்தைகளுக்கு மாநில அரசின் விருது வழங்கிடும் வகையில், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ந. நந்தினி அவர்களுக்கு 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டு பத்திரமும் வழங்கினார்.

பெண் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24–ஆம் நாள் தேசிய பெண் குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. பெண் குழந்தைகள் வாழ்வில் ஏற்றம் பெற, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு, வீரதீர செயல்புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் மாநில அரசின் சார்பில் விருது வழங்கும் விதமாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டு பத்திரமும் வழங்கப்படும் என்று 2017–18ஆம் ஆண்டிற்கான சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறையின் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டத்தைச் சேர்ந்த 14 வயது பெண் குழந்தை செல்வி ந. நந்தினி, உறவினர்கள் மற்றும் குடும்பத்தினரின் எதிர்ப்பையும் மீறி தனக்கு நடக்கவிருந்த திருமணத்தை தடுத்தி நிறுத்திய துணிச்சலை பாராட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று செல்வி ந. நந்தினி அவர்களுக்கு மாநில அரசின் விருதாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டு பத்திரமும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், இ.ஆ.ப., சமூகநலத்துறை இயக்குநர் திருமதி வி. அமுதவல்லி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**